**CCE RF**
**CCE RR**

ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢ ಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ, ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD, MALLESWARAM, BANGALORE – 560 003**

ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಪರೀಕ್ಷೆ, ಮಾರ್ಚ್/ಏಪ್ರಿಲ್ — 2018

**S. S. L. C. EXAMINATION, MARCH/APRIL, 2018**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

# MODEL ANSWERS

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

CODE NO. : **10-T**

ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

## Subject : First Language — TAMIL

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ & ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Fresh & Regular Repeater )**

ದಿನಾಂಕ : 23. 03. 2018 ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : **100**

Date : 23. 03. 2018 ] **[ Max. Marks : 100**

### பகுதி அ

**I. ஒரு தொடரில் விடை தருக : 11 × 1 = 11**

1. சொந்தமில்லாதவர் வந்தவர் ஆள நாம் யாது செய்திருந்தோம் என்கிறார் நாமக்கல் கவிஞர் ?

*Ans.* :

நம் நாட்டுக்குச் சொந்தமில்லாது எங்கிருந்தோ வந்தவர் நம் நாட்டை ஆள, நாம் தூங்கிக் கிடந்தது போதும் என்கிறார்.

2. இளையான்குடி மாறர் கறிக்காக எதனைப் பறித்தார் ?

*Ans.* :

பருவமுறாத இலைக்கறிப் பயிர்களைக் கையினாலே தடவிப் பாசப் பழிமுதலை அறவே பறிப்பார் போலப் பறித்தார்

3. பெண்கள் எவை போயின என்று கும்மியடித்தனர் ?

*Ans.* :

பெண்கள் நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின என்று கும்மியடித்தனர்.

4. காளைகளுக்குச் சொல்வது போல் மக்களுக்குப் பட்டுக்கோட்டையார் கூறுவது என்ன ?

*Ans.* :

பழைய போக்கிலே போனால் பயனில்லை. அறிவைப் பயன்படுத்த வேண்டும்.

5. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு யாது ?

*Ans.* :

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்.

6. திரு. வி.க. சொற்பொழிவை எவ்வாறு நிகழ்த்துவார் ?

*Ans.* :

திரு.வி.க. நூற்றுக்கணக்கான குறிப்புகளை விளக்கி முடிவுரையில் அந்தக் குறிப்புகளை முறைப்படி தொகுத்து முடிப்பார்.

7. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இரு வகையினர் யாவர் ?

*Ans.* :

தமக்கென வாழ்வோர்;

பிறர்க்கென வாழ்வோர்.

8. இன்றைய இளைஞன் எவற்றை இடறிவிட வேண்டும் ?

*Ans.* :

தன்னம்பிக்கையைச் சுட்டெரிக்கும் இலக்கியங்களையும் ஏற்பாடுகளையும்

9. இலங்காவித் தீவுகள் எந்த நாட்டின் ஒரு பகுதி ?

*Ans.* :

மலேசிய நாட்டின் ஒரு பகுதி

10. பம்ப பாரதத்திற்குப் பம்பன் இட்ட பெயர் யாது ?

*Ans.* :

விக்ரமார்ச்சுன விஜயம்

11. தமிழர்களைப் பழித்த வடவரசர்களைக் குறிப்பிடுக.

*Ans.* :

கனகன், விசயன்.

**II. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 9 × 2 = 18**

12. தனக்கு வரும் தீமையைப் பிற்பக லேயே அடைபவன் யார் ? விளக்குக.

*Ans.* :

ஒருவன் மற்றவனுக்குத் தீமையைப் பக ன் முன்பகுதியில் செய்தானாயின் தனக்கு வரும் தீமையைப் பக ன் பின் பகுதியிலேயே அடைவான்.

13. தலைவி உணவு சமைக்க மேற்கொண்ட செயல்பாட்டினைக் கூறுக.

*Ans.* :

விரல்களால் தயிர் பிசைந்து, கை கழுவாமல், நெகிழும் ஆடையைச் சரி செய்து கொண்டு, புளிக்குழம்பு சமைத்தாள்.

14. பெண்கள் பாரினில் எதனை நடத்த வந்தனர் என்று பாரதியார் குறிப்பிடுகிறார் ?

*Ans.* :

பட்டங்கள் ஆள்வதும்

சட்டங்கள் செய்வதும்.

15. சேக்ஸ்பியர் உரையாடல் எவ்வாறு இருக்க வேண்டும் என்கிறார் ?

*Ans.* :

இனியதாயும், இயற்கையான திறமை உடையதாயும். தாழ்வெனும் தன்மை நீங்கி, தாராளம் உடையதாயும், பொய்மை இல்லாப் புதுமை உடையதாயும் இருத்தல் வேண்டும்.

16. நீதிசாரம் என்ற நூல் பற்றி எழுதுக.

*Ans.* :

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. ஓலைச்சுவடியா இருக்கு. மரம் வளர்த்தால் நரகம் இல்லை.

17. தீப்பெட்டி ஆபிஸில் இருந்து திரும்பிய பஸ்கள் எவ்வாறு குழந்தைகளை வெளியே தள்ளின ?

*Ans.* :

கரும்புத்துண்டை மென்று விட்டு சக்கையைத் துப்புவது போல தள்ளுகின்றன.

18. சிந்தனைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றினை விளக்குக.

*Ans.* :

கால் இல்லாத கள்வன் கால் உள்ளவனைப் பிடித்தான்.

தலையில்லாதவன் அதைப் பார்த்து கலகலவென்று சிரித்தான்.

பாம்பு - தவளை - நண்டு.

19. செய்யுளின் உறுப்புகள் யாவை ?

*Ans.* :

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை.

20. வெட்சி என்றால் என்ன ?

*Ans.* :

பகை நாட்டின் பசுக்களைக் கவர்தல் வெட்சித் திணையாம்.

**III. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 9 × 3 = 27**

21. புதரில் விதைத்த வித்து போன்றவை எவை ?

*Ans.* :

அறம் தவறாது செயல்படும் ஆற்றல் இல்லாதவனது தலைமை, ஒழுக்கம் இல்லாதவனது தவம், ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவனது அழகு.

22. அனுமன் கையி ருந்த மோதிரத்தை வாங்கியதும் சீதை அடைந்த நிலை யாது ?

*Ans.* :

ஒரு சொல்லும் சொல்லவில்லை, இளைத்திருந்த உடல் பூரித்தாள். தனக்குள்ளேயே வியப்படைந்தாள். மோதிரத்தைக் கண்ட கண்கள் இமைக்கவில்லை.

23. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரிடும் ?

*Ans.* :

பதினேழாவது வயதி ருந்து இருபத்து நான்காவது வயதிற்குள் உனது திசை எதுவென்பதைத் தீர்மானிக்காவிட்டால், பாறையில் மோதிய பந்தாய் திரும்பிவர நேரும்.

24. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளை எழுதுக.

*Ans.* :

பனிக்கட்டிகள் உருகும்.

கடல் மட்டம் உயரும்.

பல தீவுகள் மூழ்கும்.

25. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?

*Ans.* :

ஒரு சொல்லோ, தொடரோ, இரண்டு பொருள் தருமாறு பாடப் பெறுவது இரட்டுற மொழிதல் ஆகும்.

**இடம் சுட்டிப் பொருள் விளக்குக:**

26. “பட்டினிகிட பலாவையே உண்பது என்று”

*Ans.* :

இடம் : இன்றைய களாவும் நாளைய பலாவும்

விளக்கம் : களா போதுமென்றால் அதுதான் இறுதிவரை. பலா கனாதான். முயற்சி செய். பட்டினி கிட பலாவையே உண்பதென்று.

27. “தெருக்களில் பாண்டி விளையாடக் கூட ஒரு பெண்பிள்ளையைக் காணோம்”

*Ans.* :

இடம் : ஒரு செய்தி.

விளக்கம் : தெருக்களில் ஒரு பெண் பிள்ளையையும் காணோம். வயசுக்கு வந்த பெண்கள் மட்டும் வீட்டுக்குள் உட்கார்ந்து கொண்டு வேகமாகத் தீப்பெட்டி ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

28. “சரி, ... பூமி கோபப்படற அளவுக்கு மனுஷன் பண்ணின தவறுதான் என்ன ?”

*Ans.* :

இடம் : சுற்றுச்சூழல்

விளக்கம் : மனிதன் இயற்கைச் சமநிலையைக் கெடுத்துவிட்டான். காடுகளை அழிக்க ஆரம்பிச்சான். கார்பன்-டை-ஆக்ஸைடு சேர்ந்து போச்சு. தொழிற்சாலைகள் விடுகிற புகையால் ஓசோன் படலம் தேஞ்சு போச்சு.

29. “எம் தமிழ்ப்பாவையைச் சுமந்து செல்லுங்கள்”

*Ans.* :

இடம் : கண்ணகி கோயில் செய்த சேரன்

விளக்கம் : இமயத்தில் கல் எடுத்த வில்லவன் கோதை, வடவாரிய மன்னர்கள் தலையில் ஏற்றி வந்தான். கனகன், விசயனிடம் ‘எம் தமிழ்ப்பாவையைச் சுமந்து செல்லும்’ என்றான்.

**IV. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : 3 × 4 = 12**

30. இளையான்குடி மாறர் மனைவி சிவனடியார்க்கு அமுது படைக்க மேற்கொண்ட செயல்களை விளக்குக.

*அல்லது*

அறன் வ யுறுத்தல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை விளக்குக.

*Ans.* :

இளையான்குடி மாறர் கொண்டு வந்த நெல்முளையில் உள்ள சேற்றைக் கழுவிய பின்னர், அவருடைய மனைவியார், அடுப்பெரிக்க விறகு இல்லை என்றதும், மாறர் வீட்டின் கூரை வரிச்சுகளை வெட்டினார். பின்னர் அவர் மனைவி, நெல்லைப் பதமாக வறுத்து, அரிசியாகக் குற்றி, உலையிலே இட்டு, இனிய அமுது படைத்தார். பின்னர் தன் கணவர் கொணர்ந்த இலைக் கறிப் பயிர்களை, இலை வேறு, தண்டு வேறாகப் பிரித்து, தூய்மையான பாத்திரத்திலே இட்டு, பலவகையான கறிகளாகச் சமைத்தார்.

அல்லது

அறம் செய்வதை விட சிறந்த செல்வம் இல்லை. அதனை மறப்பதை விடக் கொடிய கேடு இல்லை. அறச் செயல்களை இடைவிடாமல் செய்ய வேண்டும். மனத்தின்கண் குற்றம் இல்லாது இருத்தலே அறமாகும். பொறாமை, பேராசை, கடுங்கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கினையும் நீக்கிச் செய்யும் செயலே அறமாகும்.

31. சேதுப்பிள்ளையவர்கள் இவர்கள் கைவண்ணம் இங்குக் கண்டோம் என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விவரிக்கவும்.

*அல்லது*

இலட்சியம் குறித்து வைரமுத்து கூறும் கருத்துகள் யாவை ?

*Ans.* :

பேராசிரியர் சேதுப்பிள்ளைக்கு விருப்பமான பண்டங்களில் ஒன்று தயிர்வடை. அதனை அறிந்த மாணவியர் தயிர்வடை தயார் செய்தனர். விருந்தில் கலந்து கொண்ட இந்தித் துறைத் தலைவர் திரு. சங்கரராசு தயிர் வடையைச் சுவைத்து உண்டார். சென்னையில் உள்ள எந்த விடுதியில் தயாரிக்கப் பட்டதோ? என்றார். உடனே சேதுப்பிள்ளையவர்கள், மாணவியரை நோக்கி, தம் கரத்தை நீட்டி, “இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்” என்ற கம்பன் கவித்தொடரை நினைவூட்டினார். எல்லோரும் சிரித்தனர்.

அல்லது

இலட்சியமில்லாத வாழ்க்கை ஆணியில் தொங்குகிற சட்டை போன்றது. இலட்சியம் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலும் இருக்கலாம் அல்லது சூரிய மண்டலத்தைப் போல, தொட முடியாத தூரத்திலும் இருக்கலாம். ஏதாவது ஒன்று இருக்கட்டும். மருத்துவராவது, பொறியியல் வல்லுனராவது, ஆசிரியராவது என்பதெல்லாம் தேர்ந்தெடுக்கும் துறைகள். இந்தத் துறையை வாழ வைப்பதுதான் இலட்சியம். இலட்சியம் என்பது உன் எதிரியல்ல, நண்பனே!

32. செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விளக்குக.

*அல்லது*

தீப்பெட்டி ஆபிஸிற்குச் சென்று வரும் குழந்தைகள் பற்றி கி. ராஜநாராயணன் கூறுவன யாவை ?

*Ans.* :

கல்லால் ஆனதா! மரத்தால் ஆனதா! மண் கொண்டியற்றியதா! அன்றிப் பொன் கொண்டியற்றியதா! மரத்தின் நெளிவையும், வளைவையும் எப்படிக் கல் ல் ஏற்றினீர். ஓ! சிலையைக் கல் ல் வடித்ததென்று யாரும் கூறார். நிற்பது கண்ணகியே! என்று மருளும் வண்ணம் இயற்றிய உங்கட்கு ஆயிரம் காணி மானியம் விட்டேன்.

அல்லது

அதிகாலை புறப்பட்டுப் போன, தீப்பெட்டி ஆபீஸ் பஸ்கள், கரும்புத் துண்டை மென்று சாறை விழுங்கிவிட்டு, சக்கையைத் துப்புவது போல, குழந்தைகளை வெளியே தள்ளுகின்றன. சில குழந்தைகள் கையிலுள்ள கா த் தூக்குச் சட்டிகளை வீசிக் கொண்டே குதிக்கிறார்கள். சீக்கிரம் குளித்து விட்டு, சாப்பிட்டு விட்டு, படுக்க வேண்டும். ஒவ்வோர் அசைவிலும் வேகம் தெரிகிறது. போர்க்களத்துச் சவங்கள் போல, விழுந்தது, விழுந்தபடி அலங்கோலமாக அப்படி, அப்படியே கிடக்கிறார்கள். மூச்சுப் பிரிதல் ஒன்றே அவர்களை வித்தியாசப் படுத்துகிறது.

**V. அடிபிறழாமல் எழுதுக :** **$1 \times 4 = 4$**

33. "இந்திய நாடிது ....." என வரும் பாடல்.

*அல்லது*

"இனிமைத் தமிழ் மொழி ..." என வரும் பாடல்.

*Ans.* :

**நாட்டு வாழ்த்து**

"இந்திய நாடிது என்னுடை நாடே"

என்று தினம் தினம் நீயதைப் பாடு;
சொந்தமில்லாதவர், வந்தவர் ஆள
தூங்கிக் கிடந்தது போனது மாள;
வந்தவர் போனவர் யாரையும் நம்பி
வாடின காலங்கள் ஓடின தம்பி!
இந்தத் தினம் முதல் "இந்திய நாடு
என்னுடை நாடே"யென்ற எண்ணத்தைக் கூடு.

- நாமக்கல் கவிஞர்

அல்லது

**மொழிவாழ்த்து**

இனிமைத் தமிழ் மொழி எமது - எமக்கு
இன்பந்தரும்படி வாய்த்த நல் அமுது
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்றபேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை
நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்.

- பாரதிதாசன்

**VI. 34. பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருதல் :** **4 × 1 = 4**

அமெரிக்காவின் மினி இந்தியா ஹூஸ்டன். இது ஆஸ்டினி ருந்து 156 மைல் தூரமுள்ளது. அங்கே சுமார் 20,000 இந்தியர்கள் வாழ்கிறார்கள். இதில் பெரும்பாலோர் ஹூஸ்டனில் ஒரே பகுதியில் வாழ்கின்றனர். அதனால் அது ஒரு சிறிய இந்தியாவாகவே காட்சியளிக்கிறது. ஒரு சில இந்திய உணவகங்களில் இட் , மசால்தோசை, வடை முதற்கொண்டு அனைத்தும் கிடைக்கின்றன. நம் ஊரைப் போலவே, புடவைக் கடைகளும், நகைக் கடைகளும் இருக்கின்றன. இந்தியரால் நடத்தப்படும் பலசரக்குக் கடைகளும் உள்ளன. ஹூஸ்டனில் இந்தியாவில் இருக்கும் ஓர் உணர்வை நாம் பெறலாம்.

வினாக்கள்:

i) அமெரிக்காவின் மினி இந்தியா எது ?

ii) இந்திய உணவகங்களில் கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை ?

iii) ஹூஸ்டனில் வாழும் இந்தியர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

iv) ஹூஸ்டனுக்கு செல்பவர் பெறும் உணர்வு யாது ?

*Ans.* :

i) ஹூஸ்டன்

ii) இட் , வடை, மசால் தோசை

iii) சுமார் 20,000

iv) ஹூஸ்டனுக்கு செல்பவர் இந்தியாவிலே இருக்கும் உணர்வைப் பெறுகின்றனர்.

**பகுதி ஆ**

**VII. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுதல் :** **10 × 1 = 10**

35. நான்கு சீர்களைக் கொண்டது .......................................... .

*Ans.* :

(A) அளவடி

36. “போ, போ” என்பது .......................................... .

*Ans.* :

(B) அடுக்குத் தொடர்

37. ஆசிரியப்பாவின் ஓசை ................................ .

*Ans.* :

(D) அகவலோசை

38. அறிவின் மறுபெயர், இரவில் வருவது அது என்ன ?

*Ans.* :

(B) மதி

39. பாமர மக்களின் பழமை மொழி ............................ .

*Ans.* :

(C) பழமொழி

40 அழகு அழகாய்ப் பூப்பூக்கும்

அம்மாடி என்று காய் காய்க்கும்

- இதில் அமைந்துள்ள தொடை ....................................... .

*Ans.* :

(A) மோனை

41. “மனுஷங்கிட்டேயிருந்து பூமியைக் காப்பாத்தறது எப்படி ?” இது ....................................... .

*Ans.* :

(A) வினாத் தொடர்

42. “வகுப்பு சிரித்தது” இது ....................................... .

*Ans.* :

(B) இடவாகு பெயர்

43. மலையும் மலை சார்ந்த இடமும் ....................................... .

*Ans.* :

(D) குறிஞ்சி

44. ‘வெப்சைட்’ - என்பதன் தமிழாக்கம் ....................................... .

*Ans.* :

(A) வலைத்தளம்.

**VIII. தொடர்புபடுத்தி எழுதுக:** **4 × 1 = 4**

45. தீதீதீ : அடுக்குத் தொடர்

தரதர : .................................................. .

*Ans.* :

இரட்டைக்கிளவி

46. உயிர் எழுத்துகள் நீண்டு ஒ ப்பது : உயிரளபெடை

ஒற்றெழுத்துகள் நீண்டு ஒ ப்பது : ................................ .

*Ans.* :

ஒற்றளபெடை

47. பாரதியார் : தமிழ்க் கவிஞர்

பம்பன் : ................................................ .

*Ans.* :

கன்னடக் கவிஞர்

48. செய்யுளைப் பொருளால் அழகு செய்வது : பொருளணி

செய்யுளைச் சொல்லால் அழகு செய்வது : .......................................... .

*Ans.* :

சொல்லணி

**பகுதி இ**

**IX. 49. செய்திக்குறிப்பு** **1 × 5 = 5**

நீவிர் வாழும் பகுதியில் உள்ள சாலையின் நிலைமை குறித்து தகுந்த தலைப்புடன் 'தினமலர்' நாளிதழுக்கான செய்திக் குறிப்பு எழுதுக.

*அல்லது*

உம் ஊரில் நடைபெறும் சல் க்கட்டு விழாவைக் காண வருமாறு உன் நண்பனுக்கு / தோழிக்கு மடல் ஒன்று எழுதுக.

*Ans.* :

தலைப்பு: சீரற்ற சாலைகள்

- சாலையின் இருப்பிடம்
- சாலையின் நிலை
- சீரமைக்க வேண்டியதன் அவசியம்
- அரசின் கவனம் ஈர்த்தல்

- விபத்துக்களைத் தவிர்த்தல்.

*அல்லது*

நண்பனுக்கு / தோழிக்குக் கடிதம்

நாள்

இடம்

அன்புள்ள ......

- கடிதப் பொருள்

இவண்

எழுதுவோர் பெயர்

பெறுவோர் முகவரி

**X. 50. கட்டுரை வரைதல் :** **1 × 5 = 5**

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை எழுதுக:

அ. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

ஆ. கைபேசியின் பயன்கள்

இ. தமிழ் மொழியின் சிறப்புகள்.

*Ans.* :

- தலைப்பிற்கேற்ற முன்னுரை
- தலைப்பை ஒட்டிய பக்கத் தலைப்புகள்
- கட்டுரையின் நோக்கம்
- நிறைவுறும் வகையில் வ யுறுத்தல்
- முடிவுரை.